
மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.


பரிசுத்த வேதாகமம்
ஓர் அறிமுகம்

(Introducing the Bible)

ஒரு கிறிஸ்டடெல்ஃபியன் பிரசுரம்


இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk




# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்


இதழ் 19


- ★ எருசலேம்
- ★ இரண்டு ஸ்திரிகள்
- ★ மரணம்
- ★ நில் கவனி

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info

வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation

இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறையிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# எருசலேம்

## எதிர்கால உலகத் தலைநகரம்



''இது நடக்கிற காரியமா ?'' என்று அநேகருக்கு நினைக்கத் தோன்றும் ஆனால் உலகின் எதிர்காலம் எருசலேமில் தான் தீர்மானிக்கப்படும். ஏனென்றால் அங்கிருந்து தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ராஜாவாக ஆளுகை செய்வார்.

தேவனுடைய குமாரனை மரியாள் பெற்றெடுக்கப் போகிறாள் என இயேசுவின் தாயாகிய மரியாளுக்குச் சொல்லப் பட்டபோது காபிரியேல் தூதன் அவளுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் அது:

*"இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார், கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்கிறன்றைக்கும் அரசாளுவார், அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது. (லூக்கா 1:31-33)"*

"தாவீதின் சிங்காசனம்" எருசலேமில் இருந்தது அங்கிருந்து தான் கி.மு.1000 ஆண்டில், புதிதாக ஒருங்கிணைத்த தேசத்தின் தலை நகரகமாகக் கொண்டு அவன் ஆண்டான். அந்த இராஜ்யம் அழியும்வரை, 400 ஆண்டுகளுக்கும் மேலாக அந்தப் பட்டணத்தில் இருந்து தான் ராஜாக்கள் ஆண்டார்கள். ஆனால் தீர்க்கதரிசிகள் இரண்டு காரியங்களைத் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

1. ராஜ்யபாரம் மீண்டும் எருசலேமுக்குத் திரும்பவரும்.
2. அப்பொழுது அதிசயமான ராஜாவினால் அது ஆளுகை செய்யப்படும்.

தேவனுடைய ராஜ்யம்

முதலிலிருந்தே, இஸ்ரவேல் ஒரு சாதாரண ராஜ்யமாயிருக்கவில்லை. அதனுடைய ராஜாக்கள் தேவனால் நியமிக்கப்பட்டார்கள், அவருடைய கற்பனைகளுக்குக் கட்டுப்பட்டவர்களாயிருந்தார்கள், அவருடைய மக்களை ஆண்டார்கள். நாடு அவருடையதாயிருந்தது. அவர்கள் அவருடைய

கற்பனைகளை முறித்தால், சிம்மாசனத்தினின்றும் இறக்கப்படுவார்கள். அதற்கு முன்னோ அதற்குப் பின்னரோ இப்படிப்பட்ட ஒரு ராஜ்யம் பூமியில் இருந்ததில்லை. அது தேவனுடைய ராஜ்யமாய் - தம்முடைய குடிமக்களாய் இருக்க தேவன் தெரிந்து கொண்ட மக்கள்மேல் தேவனின் அரசாக இருந்துவந்தது.

ஆனால் தொடர்ந்து வந்த அரசர்கள் துணிகரமாய் தேவன் இட்ட கட்டளைகளை மதிக்காமல் இருந்தபோது, மக்களும் கீழ்ப்படியாதவர்களாய், அவருடைய வார்த்தைக்கு இணங்காதவர்களாயிருந்தபோது ராஜ்யம் ஒரு முடிவுக்கு வந்தது. தேவனே அப்படி முடிவடியும்படி செய்தார். அதே சமயம், தகுதியான உரிமைக்காரனானவர் தாவீதின் வம்சத்தில் தோன்றும் போது ராஜ்யம் திரும்ப வரும் என்பதையும் தெளிவுபடுத்தினார். (எசேக்கியேல் 21:26,27)

இப்பொழுது உரிமைக்காரனானவர் யார் என்பதில் எந்த சந்தேகமுமல்லை. கர்த்தராகிய இயேசு, தாம் முழுவதுமாய் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர் என்றும் ராஜாவாயிருக்க முற்றிலும் தகுதி பெற்றவர் என்றும் நிரூபித்தார். அவருடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தையே எப்பொழுதும் செய்ததனால், தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி தேவனுக்காக பூமியில் ஆட்சி செய்யும் அதிகாரத்தைக் கொடுத்தார். அப்பொழுது அவர் எருசலேமை உலகின் மையமாக வைப்பார். அந்த உலகம், கடைசியில் தேவனுக்குத் துதியையும் மகிமையையும் செலுத்தும், தேவனுடைய மக்கள் வாழ்வதற்கான இடமாக உலகம் அப்போது தான் மாறும். தேவன் உலகைக் குறித்து எப்போதும் விரும்பியதும் அதுவே.

### எருசலேமில் சமாதானம்

எருசலேமின் மகிமைகரமான எதிர்காலத்தை முன்னறிவித்த தீர்க்கதரிசிகள் வார்த்தைகளால் தீட்டிய பல்வேறு ஓவியங்களை ஒன்று சேர்த்துப் பார்த்தால் அந்த உலகம் எப்படியிருக்கும் என்பது புரியும். அவைகளை நீங்கள் வாசிக்கும்போது, ஒன்றை மனதில் கொள்ளுங்கள். இந்தப் புதிய யுகத்தில் நீங்கள் ஒரு அங்கமாக இருக்க விரும்பினால் இப்பொழுதே அதைக் குறித்து நீங்கள் ஒன்றைச் செய்யவேண்டும்.

நாளைய ஆசீர்வாதங்கள், தேவனுடைய நோக்கத்தில் விசுவாசித்தலும் ஞானஸ்நானம் எடுத்தலும் - இன்றைக்கு நீங்கள் ஆர்வம் காட்டி சம்மதம் கொடுத்தலை சார்ந்திருக்கிறது.

### ராஜ்யம் மீண்டும் வருதல்:

*தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர்; அதற்குத் தயை செய்யுங்காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது ....அப்பொழுது ஜாதிகள் கர்த்தருடைய நாமத்துக்கும் பூமியிலுள்ள ராஜாக்களெல்லாரும் உம்முடைய மகிமைக்கும் பயப்படுவார்கள். கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார்.* (சங்கீதம் 102:13,14,17)

(அப்போஸ்தலர் 1:6, மீகா 4:7-8 காண்க)



### கர்த்தருடைய சிங்காசனம்

*“அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள், சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேர்வார்கள்; அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின் படி நடவார்கள்” (எரேமியா 3:17; மத்தேயு 19:28; சகரியா 6:13 எசேக்கியேல் 43:7 காண்க).*

### உலக அரசும் சமாதானமும்

*‘‘சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை”* (ஏசாயா 2:3,4). சங்கீதம் 72:8; அப்போஸ்தலர் 17:31; சங்கீதம் 67:4; வெளிப்படுத்தல் 11:15யும் காண்க)

### மெய்ப்பக்திமார்க்கத்தின் மையம்

*“பின்பு எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும் கூடாரப் பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷா வருஷம் வருவார்கள்” (சகரியா 14:16; ஏசாயா 2:1-2, எசேக்கியேல் 43:18-27, சங்கீதம் 51:18-19 காண்க).*

### எருசலேமில் சமாதானம்:

*‘‘எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக. உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும் உன் ஆரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக.’’ (சங்கீதம் 122:6,7 ஏசாயா 33:20, 52;9; 62;3,6,7,12, 63;12 காண்க).*

### எருசலேமில் யூதர்கள்

*‘‘அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணவும் வருவார்கள். அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத் தொங்கலைப் பிடித்துக் கொண்டு; தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடே கூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக் கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்’’ (சகரியா 8:22,23).*

### உலகின் எதிர்காலத்திற்கான திறவுகோல்:

இஸ்ரேல் மக்களுக்கும் எருசலேம் நகரத்திற்கும் ஒரு மாபெரும் எதிர்காலம் காத்திருக்கிறது. யூத மக்கள் தங்களின் உண்மையான எதிர்காலத்தை விளங்கிக்கொண்டு, தேவனால் அருளப்பட்ட தங்கள் ராஜாவாக கர்த்தராகிய

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது, இந்த யுகத்தின் முடிவின் இறுதியை உறுதி செய்கிறது. புதியதும் மேன்மையானதுமான யுகம் ஆரம்பமாகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் வாழும் மக்கள், உலகம் எப்படி இயங்கவேண்டுமோ அப்படி இயங்குவதைக் காணும் சிலாக்கியம் பெற்றவர்கள்.

வரப்போகும் காலத்திற்காக இப்போதே ஆயத்தமாயிருப்பவர்களுக்கும் தேவனோடு சமாதானம் செய்து கொள்வதில் அவர்காட்டிய வழியாகிய விசுவாசம், மற்றும் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கும் நித்திய ஜீவன் தரப்படும். இப்போது மரணத்தின் தூசியிலே நித்திரை செய்பவர்களும் எழும்பிவந்து, அந்த யுகத்தின் ஆசீர்வாதங்களுக்குள் சேர்ந்துகொள்வார்கள் அவர்கள் தேவனை மகிமைப்படுத்தி அவர் நியமித்த ராஜாவை உயர்த்தவுமே வாழ்வார்கள்.

இந்தயுகத்தின் முடிவிலும், வரப்போகும் யுகத்திலும் மற்றும் யார் தங்கள் மெய்யான இடத்தைக் கண்டு பிடிப்பார்கள். அப்போது புதுயுகமும் ஆரம்பமாகும். நீங்கள் அங்கே இருப்பதற்காக, இப்போதிருந்தே ஆயத்தப்படுவதில் உறுதியாயிருங்கள்.

## இரண்டு ஸ்திரிகள் எப்படி ஒரு பெரிய தளபதியையும் பலமுள்ள சேனையையும் ஜெயிக்க உதவினார்கள்!

இஸ்ரவேலர் பல ஆண்டுகளுக்கு அமைதியாக வாழ்ந்தனர். எனவே அனைத்தையும் மிகச் சுலபமாக எடுத்து, சுகித்திருந்தார்கள். தாங்கள் கர்த்தருக்கு எவ்வளவு கடமைப்பட்டவர்கள் என்பதை மெதுவாக மறக்க ஆரம்பித்தனர். இப்படியாக தேவ ஆராதனையில் கவனக் குறைவாக இருந்தார்கள். வெகுசீக்கிரத்தில் தேவனை விட்டு வழிவிலகிப் போனார்கள். அவர்கள் கட்டளைக்கு விரோதமாக அந்நிய தேவர்களைச் சேவிப்பதில் மிகுந்த அக்கறை காட்டினார்கள்.

அப்போது அவர்களுக்குத் தொந்தரவு ஆரம்பமாயிற்று. அவர்கள் தேவனை விட்டு வழிவிலகினதுபோல, அவரும் அவர்களைவிட்டு நீங்கினார். அவருடைய உதவியற்று, தங்களுடைய சத்துருக்களை மேற்கொள்ள முடியாமல் தவித்தார்கள். சத்துருக்கள் இஸ்ரவேலரைச் சிறுமைப் படுத்தக் காத்திருந்தனர்.

பாலஸ்தீனாவின் வட முனையில், யோர்தான் நதியின் ஊற்று இருந்த இடம் ஹுலே ஏரியின் சமீபத்தில் இருந்தது. அங்கு யாபின் (அல்லது ஞானி) என்ற ராஜா வசித்து வந்தான். யோசுவா அதற்குமுன் அதேபேருள்ள ஒரு ராஜாவை அதே இடத்தில் அழித்திருந்தான். அவன் இரண்டாம் யாபீனைப் போன்று யூதரல்லாத புறஜாதிகளுக்குத் தலைவனாக இருந்தான்.

இரண்டாம் யாபீனுக்கு சாமர்த்தியம் நிறைந்த ஒரு தளபதி இருந்தான். இவன்



பெயர் சிசெரா, அல்லது யுத்தப்பிரியன். இவன் அவனுடைய சேனைக்குப் பொறுப்பாளியாக நியமிக்கப்பட்டிருந்தான். சிசெரா தனது சேனைக்குச் சரியான போர் பயிற்சி கொடுத்து அதன்மூலம் இஸ்ரவேலையும் அதைச் சுற்றியுள்ள நாடுகளையும் ஜெயித்திருந்தான். அவனுடைய சேனையின் மகிமை, சக்கரத்தில் இரும்பால் பொருத்தப்பட்ட வீச்சரிவாள் கொண்ட 900 குதிரை ரதங்களில் அடங்கியிருந்தது. அந்த ரதம் ஓடும் வழியில் எந்த உயிர் குறுக்கே அகப் பட்டாலும் செத்துவிழுவது உறுதி.

பாலஸ்தீனாவின் வடக்கு முனையிலுள்ள ஹரோஷெத் என்ற பட்டணத்தில் சிசெரா அதிகமாய் தெரியப்பட்டவனாக இருந்தான். அவன் வணங்காகழுத்துள்ளவனாக, யுத்தம் முடிந்து வருகையில், தான் கொள்ளையடித்த விலையுயர்ந்த பொருட்களையும் சௌந்திரவதிகளான வீட்டு வேலைக்காரிகளையும் வேலைக்கரரையும் சிறைபடுத்தி தன் வீட்டிற்கு அடிமையாக பவனியில் கொண்டுவருவதுண்டு. அவனுடைய வீரம் மற்றும் வெற்றியைக்கண்டு ஜனங்கள் ஆர்ப்பரிப்பது வழக்கம்.



அவன் வெற்றி எல்லாத் திசைகளில் பரவியிருந்தது. அவனுடைய வீரர்கள் கொடுமையும் கொடூரமுமாக மாறினார்கள். ஏனெனில், இஸ்ரவேலரை மிகவும் கொடூரமாக நசுக்கினட்டினால், அவர்கள் என்ன செய்தாலும் சிசெரா அவர்களைத் தண்டியாமல் பாதுகாப்பான் என்று அவர்களுக்கு நன்றாகத்தெரியும். வெகுசீக்கிரத்தில் பெரிய வீதிகளில் இஸ்ரவேலர் நடமாட முடியாத அளவில் ஆயிற்று (நியாயாதிபதி 5:6-7). பயணிகள் ரகசிய மார்க்கங்களில் வெளியூர் சென்றனர். தங்களை இஸ்ரவேலர் கப்பம் கட்ட வைத்தார்கள் என்று கானானியர் இப்போது அவர்களைத் துன்பப்படுத்தினர். பாதுகாப்பற்ற பட்டிதொட்டிகளில் குடியிருந்த கிராமத்தார் தங்கள் வீடுகளை விட்டுவிட்டு அரணான பட்டணங்களுக்குள் பாதுகாப்புக்காகத் தஞ்சம் புகுந்தனர். எனினும் இந்தத் துன்பங்களெல்லாம்

அவர்கள் தேவனைவிட்டு தூரம்போனதை அவர்களுக்கு நினைவுப்படுத்தியது. அவரிடத்தில் சத்துருவுக்கு எதிரான உதவிக்காக வேண்டிக்கொண்டார்கள்.

## இஸ்ரவேலருக்கு உதவும்படி தெபொராளைத் தேவன் அழைத்தல்

(நியாயாதிபதி 4:4-6)

தேவன் அவர்களுக்கு உதவினார். இஸ்ரவேலின் தென்பகுதியில் சிசேராவின் தலைமை பீடத்துக்கு அப்புறத்தில், ராமா என்ற ஊரில் வசித்துவந்த தெபொராள் மிகவும் தைரியசாலியான பெண்ணாக இருந்தாள். இந்தப் பெயர் "ஒரு தேனீ"யைக் குறிக்கிறது. அவள் இஸ்ரவேல் என்ற தேன்கூட்டின் ராணி ஈபோல இருந்தாள். ஜனங்களின் கெட்ட வழிகளைக் குறித்து துக்கப்பட்டாள். எஹோவா தேவனை ஆராதிக்கும்படி அவர்களை அழைத்தாள். ஆனந்த வேளைகளில் ஜனங்கள் அவள் வார்த்தைக்குச் செவிகொடுக்க வில்லை. இப்பொழுது அவர்கள் வருத்தப் பட்டு தினமும் அவர்கள் நிலைமை மோசமாகும்போது அவளுடைய ஞானமுள்ள ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்தனர். தாங்கள் கை விட்டிருந்த ஒரே கடவுளிடம் திரும்புவது ஒன்றே தங்கள் துன்பத்தின் நெருக்கத்திலிருந்து தப்பும் வழி என்று உணர்ந்தார்கள். அவர்கள் இப்படி செய்தபோது உதவி அவர்களுக்கு மிகவும் சமீபமாக இருந்தது.

வட பாலஸ்தீனாவில், சிசெராவின் தலைமையகத்துக்கு அருகில், நப்தலியின் பட்டணமான தாதேஷில் ஒரு உண்மையுள்ள மனிதன் வசித்துவந்தான். அவன் பெயர் பாராக் (மின்னல்). ஒருநாள் அவன் தெபோராளிடமிருந்து எதிர்பாராத செய்திபெற்றான். அவள் கூறியனுப்பினது, *"இஸ்ரவேலின் யாஹ்வே கட்டளையிட்டு சொல்லியனுப்பினது என்னவென்றால், நீ இஸ்ரவேலின் சேனையைக் கூட்டிக்கொண்டு, தாபோர் மலைக்குப்போ. அங்கு நான் சிசெராவையும், அவன் ரதங்களையும், அவன் சேனையையும், உன்னிடத்திற்கு வர இழுத்து, அவனை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்" என்பதே (நியாயாதிபதி 4:6-7).*

என்ன விதமான கட்டளை! இந்த வல்லபெரும் சத்துருவைச் சந்திக்கும் படி தன்னிடம் வேண்டிய அளவு போராயுதங்கள் இல்லை என்று பாராக் நன்றாக அறிந்திருந்தான். (நியாயாதிபதி 5:8) அவ்வாறு எப்படி சிசெராவை அவன் தோற்கடிக்கமுடியும்? ஆனால் அவன் விசுவாசம் நிறைந்தவன். மேலும் இஸ்ரவேலின் தேவனிடம் மிகுந்த பற்றுகொண்டவன். அவன்ஜனத்துக்காக அவன் செய்தாக வேண்டும் என்ற சூழ்நிலை இருந்தது.

ஆனால் பாராக் பயமுள்ளவனாக வேறே ஆதரவைத் தேடினான். அவன் தனியாக எதிரிகளைச் சந்திக்க ஆயத்தமாக இல்லை. மேலும் எல்லாரும் தெபோராளை மதித்து வந்ததால் அவளுடைய சொல்லை அல்லத் தட்ட யாருமே துணியவில்லை. ஆதலால், தெபோராள் தன்னுடன் வந்தாலொழிய, தானாக யாரையும் கூட்டிச் சேர்க்க முடியாது என்று சொல்லியனுப்பினான்.



தெபோராளிடமிருந்து பதில் வந்தது, *"நான் உன்னோடேகூட நிச்சயமாய் வருவேன். ஆனாலும் நீ போகிற பிரயாணத்தில் உண்டாகிற மேன்மை உனக்குக் கிடையாது. கர்த்தர் சிசெராவை ஒருஸ்திரீயின் கையில் ஒப்புக் கொடுப்பார்."*

## யுத்தத்துக்கு அழைப்பு

காதேஷ் என்னும் இடத்திலிருந்து, தெபோராள் மற்றும் பாராக் ஒருங்கிணைந்து, கடவுளில் நம்பிக்கை வைக்கவும், சிசெரா மற்றும் யாபீனின் குரூர அதிகாரத்தை முறிக்கவும் அழிக்கவும் பாராக் தலைமையில் ஒன்றுசேரும்படி அழைப்பு விடுத்தனர். இதற்கான செய்தியாளர்கள் இஸ்ரவேலில் கோத்திரம் கோத்திரமாக இந்த செய்தியை எடுத்துச் செல்லும்போது அதைக் கேட்டவர்கள் வெவ்வேறு வகையில் அதை வரவேற்றனர். பாராக்கின் சொந்த கோத்திரமாகிய நப்தலியும் செபுலோனும் உடனே ஒப்புக்கொண்டனர். இவர்கள் சிசெராவுக்கு மிகவும் அருகில் குடியிருந்ததால் அவனுடைய இம்சையை அதிகமாய் அனுபவித்து உணர்ந்து தவர்கள். இசக்காரின் அதிபதிகளும்கூட கூடிவந்தனர். பென்யமீனின் சேனையும் சேர்ந்துகொண்டது. எப்பிராயீம், மனாசே கோத்திரங்களில் சிலர் வந்து சேர்ந்தனர் (நியாயாதிபதி 5:14). கூடிய சீக்கிரத்தில் பாராக்கின் தலைமையில் கூடின இஸ்ரவேலர் உண்மை விசுவாசமும் உள்ளவர்களாயும், அதற்காகத்தங்கள் ஜீவனைக்கொடுக்க ஆயத்தமுள்ளவர்களாயும் இருந்தனர். அவனது சேனையில், யுத்தம் செய்யத்தெரிந்தவர்களும் தெரியாதவர்களுமான பலதரப்பட்ட மக்கள் கலந்திருந்தார்கள். இவர்களில் எழுத்தாளரின் எழுதுகோல் பிடிக்கிறவர்களான வேதபாரகர் யுத்த அனுபவமில்லாதவர்களாக இருந்தனர் (நியாயாதிபதி 5:14).

எஸ்தரெலான் பள்ளத்தாக்கிலுள்ள தாபோர் மலை - பாராக் மற்றும் தெபொராள் தங்களுடைய பலமற்ற சேனையுடன் வடஇஸ்ரவேலில் சிசெரா தனது இரதங்களுடன் பாளயமிறங்கியிடத்திற்குச் சற்று தாழ்வான சரிவுகளில் பதுங்கினர். அதற்குள் தெபோராள் தெற்கு இஸ்ரவேலில் குடியிருந்த மீதி கோத்திரங்களை, பென்யமீன் உட்பட, ஆதரவு தரும்படி அழைத்தாள். அந்த வீரர்கள் சீசோன் ஆற்றின் பின்பகுதியிலும் மெகித்தோவுக்கு அருகில் தானாக் முன்பும் காத்திருந்தனர். இவ்வாறு பல முனைதாக்குதலுக்கு உள்ளான சிசெராவின் ரதங்கள் கீசோன் பகுதியில் கலைய ஆரம்பித்தன. அவைகள் முறிந்துபோகும்படி கலங்கடித்தார். அதனால் சுரிமழைபெய்து ரதங்கள் ஓடமுடியாதபடி சேறாயிற்று, இஸ்ரவேலின் தாக்குதல் எல்லாப் பக்கமும் இருந்ததால் அவர்கள் முற்றிலும் தோற்றுப் போனார்கள்.

கோத்திரங்களின் பங்கேற்பு குறைவாக இருந்தபடியால், சில இடங்கள் காலியாக இருந்தது வருந்தத்தக்கது. யூதாவிடமிருந்து ஒன்றும் தகவல் இல்லை. தாண் மற்றும் ஆசேர் கோத்திரங்கள் தங்கள் இடத்தைவிட்டு நகர மறுத்துவிட்டனர். கரைபுரண்டுவந்த யோர்தானுக்கு கிழக்கே அப்புறத்தில்

குடியிருந்த கோத்திரங்களின் நடுவே ஒற்றுமை இல்லாததால் தெபோராள் மற்றும் பாராக் விடுத்த அழைப்பிற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமலிருந்தார்கள். ரூபன் இதற்கு உதவிசெய்ய மறுத்துவிட்டான். காத் மற்றும் மனாசே அதையே பின் பற்றினார்கள். யோர்தான் நதி இயற்கை தடையாக அமைந்தது. சிசெராவுக்கு எதிரான பாராக்கின் கிளர்ச்சியில் பங்கெடுத்து ஒருவேளை தோற்றுப்போனால் என்னசெய்வது? பலசாலியான சிசேரா தங்களுடைய செழிப்பான பகுதியில் படையெடுத்து, மேற்குப் பகுதியிலுள்ள கோத்திரங்களிடம் கப்பம் வசூலிக்கிறதுபோலத் தங்களையும் ஒடுக்கினால் என்ன செய்வது என்ற பயத்தினால் ஒத்து வராமலிருந்தார்கள்.

## சிசேரா கலகத்தைக் குறித்து கேள்விபடுதல்

எனினும், தெபோராள் மற்றும் பாராக் கொடுத்த யுத்த அழைப்புக்கு பெரும் பாலானவர்கள் செவிகொடுத்து காதேஷ் (தேவஸ்தானம் என்றர்த்தமுள்ள அடைக்கலப் பட்டணம்) என்ற பட்டணத்துக்கு வந்து சேர்ந்து, மேலே செய்யவேண்டிய நடவடிக்கையைக்குறித்து தீர்மானித்தார்கள். தங்களிடம் மிக்க குறைந்த போராயுதம் இருப்பதையும், சிசெராவின் படைபலத்தையும் நன்றாய் உணர்ந்திருந்தனர். ஆனால் அவர்களிடம் விசுவாசம் இருந்தது. தெபோராள் அவர்களிடம், "எஸ்தரேலான் பள்ளத்தாக்குக்கு எதிரேயுள்ள தெற்கு தாபோர் மலைக்கு நீங்கள் போகும்படி தேவன் விரும்புகிறார்" என்று சொன்னபோது, அவர்கள் அந்தநோக்ககத்தோடு அங்கு புறப்பட்டுச் சென்றனர்.

அவர்கள் கேனத்தியனாகிய கேபாரின் வழியே சென்றார்கள். அவன் சானீம் (கூடாரங்களை இறக்கின கருவாலி மரம் என்றர்த்தமுள்ள) சமவெளியருகிலுள்ள காதேஷில் தங்கியிருந்தான். ஹெபேருக்கு நிரந்தரமாகத் தங்கும் இடம் இருக்கவில்லை. சரியான வீடு இருக்கவில்லை. அவனுடைய குடும்பத்தோடு கூடாரங்களில் தங்கினான். சானீம் கர்வாலி மரங்களுக்கடியில் அவன் தன் கூடாரங்களை இறக்கி, அங்கே தங்கியிருந்தான். அவன் சிசெராவுடன் சமரசமாக இருந்தான். எனவே, இஸ்ரவேலர் தங்கள் தேசத்தின் அனைத்து பகுதியிலிருந்தும் காதேஷில் பாராக்கினிடத்திற்குக் கூடிவருகிறதையும், அங்கிருந்து சேனையாக எழும்பி தாபோரின் தெற்குப் பகுதிக்குப் போகிறதையும் கண்டு, சிசெராவிற்கு அந்த கலகத்தைக் குறித்து எச்சரிப்பு கொடுக்கும் வண்ணம் சொல்லியனுப்பினான்.

அதைத்தான் தேவன் விரும்பினார். ஏனெனில் தேவன் தெபோராளிடம் பேசி, சிசேரா தன் அழிவுக்கென்று மெகித்தோவின் பகுதிக்கு இழுக்கப்படுவான் என்று கூறியிருந்தார்.

சிசெரா வேண்டா வெறுப்பாக, பாராக் தன் சேனைகளைத் தாபோருக்கு அழைத்து வந்த செய்தியைக் கேள்விப்பட்டான். இந்த மலை எஸ்தரெலான் பள்ளத்தாக்குக்கு எதிரில் அமைந்துள்ளது. இந்தப் பள்ளத்தாக்கு சரிவான



சமபூமிபோன்று மத்தியதரைகடலிலிருந்து பரவிய நிலப்பரப்பாகவும், யுத்தத்திற்கு மிகச் சாதகமாகவும் அமைந்துள்ளது. தனக்கு மிகவும் லேசாக வெற்றி கிடைக்கும் என்று சிசெரா முழுநிச்சயமாக இருந்தான். மிகப் பெருமையோடு தனது 900 குதிரை ரதங்களோடு, தன் யுத்தத்தின் வெற்றியின் நிச்சயத்தோடும் ஜனங்களின் ஆரவாரத்தோடும் ஹரோஷேத்திலிருந்து வழியனுப்பப்பட்டான். எஸ்தரேலான் பள்ளத்தாக்கில் சிசெராவின் இரதங்கள் பவனிவந்து தாபோரின் மலைக்கு எதிரில் வந்து நின்றன. நப்தலி மற்றும் செபுலோன் கோத்திரத்து சேனையில் 10,000 மக்கள் பாராக் மற்றும் தெபோராளின் தலைமையில் தாபோர்மலைச்சரிவில் பாதுகாப்பாகக் காத்திருந்தனர் (நியாயாதிபதி 4:6). அவர்கள் சிசெராவுக்கும் அவனுடைய இரதப் படைக்கும் எந்த விதத்திலும் ஈடாக நிற்க முடியாதாகையால், சமவெளிக்கு இறங்கிபோகும் துணிச்சல் இருக்கவில்லை.

இதற்குள், தெபோராள் ஒழுங்கு செய்திருந்தபடி, இஸ்ரவேலின் மற்றொரு சேனையாகிய இசக்கார், எப்ராயீம் மற்றும் பென்யமீன் கோத்திரத்தாரின் கூட்டம் மெகித்தோவின் அருகாமையிலுள்ள தானாக்குக்கு வடக்கு பகுதியில் கீசோன் ஆற்றண்டை இறங்கிவந்தனர் (நியாயாதிபதி 5:14-15). இந்த பயங்கர சேனை வந்ததும் சிசெரா கேள்விப் பட்டான். எனினும் தன்னுடைய பயிற்றுவிக்கப்பட்ட சேனையைக்கொண்டு சற்றும் கலங்காமலும் இஸ்ரவேலுக்குப் பயப் படாமலும் இருந்தான். பாராக் தன் சேனையோடு தாபோரின் மலைச்சரிவில் சிக்கிக் கொண்டான் என்று நினைத்த சீருசரா தன் குதிரை ரதப்படையுடன் புதிதாகச் சேர்ந்த சேனையைக் கலங்கடிக்கும் ரதப்படை புறப்பட்டது. அது கீசோன் ஆற்றுக்கு நேராகவும், மெகித்தோ மற்றும் மெகித்தோவின் சதுப்பு நிலம் வழியாகவும் சென்றது (நியாயாதிபதி 5:19). அவன் அப்படிச் செல்கையில், கார்மேகம் சடிதியாகப் பிடித்து வானம் இருண்டது. சூரியவெளிச்சம் மறைந்து வானம் இறங்கிவந்தது போல சீதோஷ்ண மாற்றம் ஏற்பட்டது.

## சிசெரா தோற்றவிதம்

இந்த அடையாளத்துக்காக தெபோராள் காத்திருந்தாள் (நியாயாதிபதி 5:2). தாபோர் மலைச்சரிவிலிருந்த சேனை புறப்படும்படி தெபோராள் கட்டளையிட்டாள். உடனே குறைவான ஆயுதபலங்கொண்ட இஸ்ரவேலின் சேனை சீக்கிரமாகவும் பயமில்லாதவர்களாகவும் சிசெராவின் சேனையைத்தாக்கும்படி முன்னேறினார்கள். இஸ்ரவேலின் பாதுகாப்பு யாஹ்வே தேவனில் இருந்தது. அது அவர்களுடைய சேனைவீரர்களின் திறமையிலோ அல்லது போராயுதங்களிலோ இருக்கவில்லை. இப்போது வானத்தின் அறிகுறிமோசமானது, இருண்ட கார்மேகம் அந்தப் பகுதியில் கொத்து கொத்தாக கீழே இறங்கிவிட்டது. வானத்திலிருந்து இடிமுழக்கம் முழங்க மின்னல் வெட்டு பயங்கரமாக மோதியது. மெதுவாக தூரத்தில் வீசினகாற்றின் சத்தம் புயலாக உருவெடுத்து வீசியது. அதில் ஒரு பகுதி கடும்புயலாக மாறி துரத்தி ஓடின கானானியருக்கு எதிராக பயங்கரமாக வீசியது. வானங்களிலிருந்து இடிஇடித்து, மின்னல்தாக்கி, உக்கிர கோபத்துடன் பேய்க்காற்றுடன் பெய்தமழை

சிசெராவுக்கும் அவன் சேனைகளுக்கும் முகத்தில் அடித்ததால் அவர்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். இஸ்ரவேலர் அவர்களைத்தாக்க அது சாதகமாயிற்று (நியாயாதிபதி 4:15; 5:20-22; யோசபெஸ் சரித்திரசுருள்)

வீசின கடுங்காற்றினுலும் பெய்த கனமழையினுலும் கீசோன் ஓடையில் நீரோட்டம் பெருகி ஆறாய் வெள்ளம் புரண்டது. அதன் கரைகள் உடைந்தன. தண்ணீர் கசிந்து அருகிலுள்ள சமவெளியில் எங்கும் பாய்ந்து, கானானியரின் கனத்த இரும்பு ரதங்களைச் சதுப்பு நிலத்தில் பதியச் செய்தது. இடிமுழக்கமும், இயற்கைக்கு அப்பாற்பட்ட இருட்டும், பெய்த கனமழை, கடுங்காற்றும் சேர்ந்து குதிரைகள் மற்றும் கானானியரின் முகத்தில் நேரடியாகத் தாக்கினதுடன் மழைநீரினால் நிறைந்த வெள்ளத்தினால் அவர்கள் நடுவில் பெரிய குழப்பமும் திகிலும் ஏற்பட்டது (நியாயாதிபதி 5:22). அதனால் (குறைவான ஆயுதங்களை வைத்திருந்த இஸ்ரவேலர் இரதங்களின்மேல் சீறிப்பாய்ந்து படையாட்களைத்தாக்க வசதியாக இருந்தது. கானானியர் முற்றிலும் முறியடிக்கப்பட்டு தீர்ந்தது. பயத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் தங்கள் ஆயுதங்களையும் ரதங்களையும் விட்டுவிட்டு, கால்நடையாய் தப்பி ஓடினார்கள். குழப்பம் மிகுந்த சூழ்நிலையில் அவனவன் சொந்த உயிர்காக்க ஓடினான். அவர்களை இஸ்ரவேலர் விரட்டிப் பிடித்தனர். அந்த ஓட்டமும் விரட்டுதலும் மேரோஸ் ஊரைக் கடந்து தொடர்ந்தது. அங்கிருந்து பாராக்குக்கு ஆளனுப்பி, யாஹ்வேதேவனால் கொடுக்கப்பட்ட வெற்றியை முடிக்க உதவும்படி கீழே இறங்கி வரும்படி செய்தி அனுப்பப்பட்டது. அந்தச் செய்தி போய்ச் சேரவில்லை. பின்பு தெபோராள் வெற்றிக்கீதமாகப் பாடின பாட்டில், *“மேரோசைச் சபியுங்கள்; அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணைநிந்த வரவில்லை. பராக்கிரமசாலிகளுக்கு விரோதமாய் அவர்கள் கர்த்தர்பட்சத்தில் துணைநிற்க வரவில்லையே” (நியாயாதிபதி 5:23).* மேரோஸ் உதவிக்கு வராதிருந்தும் சிசெராவின் படை அழிக்கப்பட்டது. (நியாயாதிபதி 4:16).

### சிசெரா தப்பி ஓடுதல்

அவ்வாறு தப்பி ஓடினவர்களில் சிசெரா என்ற மகா படைத்தலைவனும் தளபதியும் ஒருவன். ஓட்டமுடியாத தன் ரதத்தை விட்டிறங்கி தன் ஜீவன் தப்ப நினைத்த சிசெரா இஸ்ரவேலின் கோபத்துக்குத்தப்பி, எங்காவது மறைந்து வாழ்ந்து, அங்கிருந்து ஒரு சேனையை உருவாக்கி, அவர்களைப் பழிவாங்கலாம் என்று நினைத்தான். ஹரோஷெத்துக்குத் திரும்பிப் போவது தனக்கு மிக ஆபத்தானது, வந்தவழியே திரும்ப இயலாது என்று வடக்குப் புறமாய் ஹேபேர் குடியிருப்பை நோக்கி, அவன் உதவுவான் என்று நம்பி அங்கு ஓடினான்.

பாராக் தன்னைப் பிடிக்கும்படி முயலுவான் என்று சிசெராவுக்குத் தெரியும். மேலும் இஸ்ரவேலர், ஹேபேர் சிசெராவுக்குச் சாதகமாயிருந்ததால் ஹேபேரின் கூடாரங்களில் அவனை வலைவீசி தேடுவார்கள் என்பதையும் அறிந்திருந்தான். ஆதலால் அவன் ஹேபேரின் கூடாரத்துக்குப் போகாமல், அவனுடைய



மனைவியாகிய யாகேலின் கூடாரத்துக்குப் போனான். அவனிடம் மறைந்துகொள்ள அனுமதி கேட்க நினைத்தான். பெண்களின் கூடாரங்களுக்கு ஆண்கள் வழக்கமாக அனுமதிக்கப்படுவதில்லை. ஆகையால் யாருமே தன்னைத் தேடி அங்கு வரமாட்டார்கள் என்று நினைத்தான்.

மிகவும் இளைப்பும் சோர்வும் அடைந்தவனாக, சரீர பலவீனத்தினால் ஆகாரம் தேடின பசியுடனும், தோல்வியைத் தழுவின விரத்தியுடனும் சிசெரா யாகேலின் கூடாரத்துக்கு வந்தான். அவள் வாசலில் நின்றபோது, தன்னை உள்ளே அனுமதிக்கும்படி வேண்டினான். அப்படியே யாகேலும் அவனைப் பயப்பட வேண்டாம் என்று உள்ளே அழைத்தாள். அவன் அப்போது கொஞ்சம் தண்ணீர் கேட்டான். அதற்கு அவள் பதிலாகச் சூடான பால் குடிக்கக் கொடுத்தாள். பின்பு அவனைக்கம்பளியால் மூடினாள். அவனை பயமின்றி இளைப்பாறச் சொன்னாள். சிசெரா தூங்குமுன், *“நீ கூடாரவாசலிநின்று, யாராவது ஒருவன் வந்து, இங்கே யாராகிலும் இருக்கிறார்களா என்று உன்னிடத்தில் கேட்டால், இல்லை என்று சொல்”* என்றான்.

அத்துடன் சிசெரா மிகுந்த களைப்பாக இருந்ததால் கனநித்திரையில் ஆழ்ந்தான்.

### சிசெராவின் பயங்கர மரணம்

ஆனால் யாகேல் சுத்தியலை ஒருகையிலும், கூடார ஆணியை மறுகையிலும் எடுத்துக்கொண்டு, நன்றாக அயர்ந்து தூங்கின தளபதிகிட்டே வந்தாள். கேனியர் யாபீனுடைன் பட்சமாக நடந்து கொண்டாலும், யாகேலின் மனது இஸ்ரவேலின் பட்சமாக இருந்தது. இஸ்ரவேலரை மிகக் கொடுமையாய் தண்டித்த கொடூர கானானியரை யாகேல் வெறுத்தாள். சிசெராவில் அந்த எல்லா கொடூரமும் இரத்த வெறியும் அடங்கியிருந்ததையும், அதனால் பல வருஷங்கள் இஸ்ரவேலர் துன்பமடைந்ததையும் அவள் கண்டிருந்தாள். ஆதலால் அவள் சுத்தியலை உயர்த்தி சிசெராவின் தலையில் ஓங்கி அடித்தாள். சிசெரா அவள் காலடியில் புரள, நெற்றியில் கூடார ஆணியைத் துளைத்து அடிமேல் அடி அடித்து மண்டை ஓட்டுக்குள் அதை அடித்தாள். இதனால் அவன் இறந்தான்.

பின்பு அவள் கூடாரத்தைவிட்டு வெளியே வந்து, சிசெராவைத் தேடிவந்த பாராக்கை எதிர் கொண்டு, *“வாரும், நீர் தேடுகிற மனிதனை உங்களுக்குக் காண்பிக்கிறேன்”* என்று உள்ளே அழைத்துச் சென்றாள். இவ்வாறு சிசெராவின் தோல்வியின் மகிமை பாராக்கிடமிருந்து எடுக்கப் பட்டு, தெபோராள் கூறினபிரகாரம், ஒரு ஸ்திரீக்குக் கொடுக்கப்பட்டது (நியாயாதிபதி 4:9).

அதேசமயம், ஹரோஷெத் பட்டணத்தில் ஜனங்கள் கலக்கத்துடன் காத்திருந்தனர். ஏனெனில் சிசெரா வெற்றிபெற்று திரும்பியிருக்க வேண்டிய நேரம் கடந்துப் போயிருந்தது. போராயுதங்கள் மிகக் குறைவாக வைத்திருந்த இஸ்ரவேலரின் சேனையை முறியடித்துவர இவ்வளவு தாமதம் எதற்கு? என்று

ஜனங்கள் வியப்புடன் காத்திருந்ததில் அதிசயம் இல்லை. அவனுடைய அரண்மனையில் சிசெராவின் தாய் அவன் வெற்றியுடன் திரும்புவான் என்று காத்திருந்ததுடன், ஏன் இந்த தாமதம் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தாள். “ஏன் அவனுடைய ரதங்கள் திரும்பி வரத் தாமதமாகின்றன? ஒருவேளை அவர்கள் யுத்தத்தில் கிடைத்த கொள்ளை பொருட்களைச் சேகரித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் வந்தவுடனே நாம் அதில் பங்கு பெற்றுக்கொள்ளலாம்” என்று தனது அயல்வீட்டாரிடம் சொல்லித் தேற்றிக் கொண்டாள்.



ஆனால் வெகுசீக்கிரத்தில் அவளுக்குச் சிசெராவின் தோல்வியின் செய்தி வந்தெட்டியது. மறுகணமே அவள் யாபீனுடைய ஆட்சி முடிவுக்கு வந்தது என்பதை உணர்ந்துகொண்டாள். கானானியரின் சேனையின் அபிதோல்வியைக் கேள்விப்பட்ட ஹரோஷெத் பட்டணத்து மக்கள் நடுவில் அழுகையும் கூக்குரலும் மேலோங்கியது.

### தெபோராளின் துதிபாடல்

ஆனால் இஸ்ரவேலின் மத்தியில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருந்தது. அவர்களுடைய சந்தோஷத்தைக் கொண்டாடும் விதமாக, தெபோராளும் பாராக்கும் ஒரு அற்புதமான துதிபாடலைப் பாடினார்கள் (நியாயாதிபதி 5:1). அந்தப் பாடலில், அந்நிய தேவர்களைத் தேடிச்சென்ற இஸ்ரவேலரின் அஞ்ஞானம் (வச 8), தேசத்தில் உதித்திருந்த விசுவாசத்தின் உயிர்மீட்சி (வச 9-12), பாராக் யுத்தத்திற்கென்று விடுத்த அழைப்பு (வச 13-15), இஸ்ரவேலில் விசுவாசக்குறைவான ஜனம் (வச.15-17), இஸ்ரவேலுக்கு ஜெயம் கொடுத்த தெய்வீக உதவி (வசல 8-22), தோற்றுப்போன சேனையின் ஓட்டம் (வச.23), சிசெராவின் மரணம் (வச 23-27), மற்றும் ஹரோஷெத்தின் குடிகள் மத்தியிலிருந்த கலக்கம் (வச 28-30) குறித்துப் பாடினார்கள். அந்தப் பாடலின் முடிவில், *“கர்த்தாவே, உம்மைப் பகைக்கிற யாவரும் இப்படியே அழியக்கடவர்கள். அவரில் அன்பு கூருகிறவர்களோ, வல்லமையோடே உதிக்கிற சூரியனைப்போல இருக்கக்கடவர்கள்”* என்று பாடினார்கள். *(வச.31)*

தேபோராளின் கிரியை இந்த மாபெரும் வெற்றியுடன் தீர்ந்துவிடவில்லை. அவள் தொடர்ந்து இஸ்ரவேலை ஞானத்தோடு வழிநடத்தி நியாயந்தீர்த்து வந்தபடியால் “தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது.”



# மரணம்

*“செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ அதை உன் பெலத்தோடே செய். நீ போகிற பாதாளத்தில் செய்கையும், வித்தையும், அறிவும், ஞானமும் இல்லையே” (பிரசங்கி 9:16).*



நம் அனுதின வாழ்க்கையில், நம்மைச் சுற்றி நடக்கும் பொதுவான காரியம் ஒன்று ‘மரணம்’. அநேக நேரங்களில் ‘‘இறப்புச்செய்தி’’ (Obituory) என்ற பகுதியில் சில பெயர்களை குடும்பத்தாரின் சில பெயர்களும் காணலாம். மற்றும், இந்த “இறப்புச்செய்தி” என்ற பகுதியில் நம்முடைய பெயரும் ஒரு நாளில் நிச்சயமாய் வெளிவரும்.

மரணம் என்பது நிச்சயம் என்று அறிந்த போதும், பொதுவாக, சில ஆண்களும் பெண்களும் நிரந்தரமாய் வாழ்வது போல் தம்முடைய வாழ்க்கையை வாழ்கின்றனர். ஒருவேளை நாம் தன்னம்பிக்கை உடையவர்களாய் விருப்பமில்லாத நாம் மரணத்திற்கு நேராய் மெதுவாய் கடந்து செல்கிறோம் என்பதை உணராமல், நம் மனதை திருப்பி ஜீவிக்கிறவர்களாய் இருக்கின்றோம்.

அநேக மக்கள் தங்களுக்கென்று ஒரு உண்மையான நோக்கமோ/திட்டமோ இல்லாமல் மனித வர்க்கமாகிய கடலில் மூழ்கி, தங்கள் விருப்பத்தின்படி வாழ்ந்து முதலில் மரிக்கின்றனர். அவர்களின் எல்லா பொன்னான நேரங்களும் பணமும், அவர்களின் எல்லா யோசனைகளும் மிக அற்பமான, முக்கியமில்லாத காரணத்திற்காக செலவழிக்கின்றனர். நம்மோடு பணிபுரிபவர்களின் உரையாடல்களையும், நம் அக்கம் பக்கத்தில் இருக்கிறவர்களின், உரையாடல்களையும் கவனிப்போமாகில் அவை, விளையாட்டு ரீதியான விஷயங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் குறித்த விஷயங்கள், தங்கள் வாகனங்கள், விடுமுறைகள் மற்றும் இப்படிப்பட்ட இதர காரியங்களைக்

குறித்ததாகவே உள்ளது. *"அவன் குறிக்கோள், பெருமை, ஆடம்பரம் எல்லாம் மாயை, அவன் மனதை அலைக்கழிக்கும் அன்பும், கரிசனையும் மாயையே இன்னலோடு சேமித்து வைக்கும் பொக்கிஷம் மாயையே எல்லாவற்றையும் விட்டு அவன் மரிக்க வேண்டும்"* என்ற கருத்துக் கொண்ட ஒரு துதிப்பாடல் எத்தனை உண்மையுள்ளது.

இதையே "சாலோமோன்" வலியுறுத்தி கூறியுள்ளார். நாம் எதைச் செய்யவேண்டும் என்றும், நம் முழு பெலத்தோடு செய்யவேண்டும் என்பதையும் அறிந்துக் கொள்ள இப்போதே நல்ல தருணம். நாம் எத்தனை வருடங்கள் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல, நாம் எப்படி வாழ்கிறோம் என்பது தான் முக்கியம். வேதத்தில் காணப்படும் 'மெத்துசலா' **969** வருடங்கள் வாழ்ந்தான். 'இயேசு கிறிஸ்துவோ' **33** வருடங்கள் வாழ்ந்தார். 'மெத்தூசலா' அத்தனை வருடங்கள் என்ன செய்தார் என்பது தெரியாது. ஆனால் கிறிஸ்து வெறுமனே மூன்றரை வருடங்களின் ஊழியங்களில் என்ன சாதித்தார் என்பதை அறியலாம்.

நாம் உயிரோடிருக்கும் வரை நமக்கு வேலைகள் உண்டு. நாம் அதை வகையறுத்து கண்டு பிடித்து எப்படி செயல்படவேண்டும் என்பதை அறிந்து செயல்படுவது நம் கடமை. இந்நாட்களில் மிக குறைவாக எதை செய்ய முடியுமோ அதையே செய்கிறோம். நாம் முழு பெலத்தோடு, செயல்படுவது குறித்து சற்றும் சிந்திப்பது இல்லை. குறைந்த பட்சம் என்ன செய்ய வேண்டும் என்பதையாவது அறிந்து செயல்படுவோம்.

தேவனுடைய ராஜ்யத்தில் சேருவதற்கு குறைந்த பட்சம் என்ன செய்யவேண்டும் என்று லுக்கா 17:10ல் இயேசு இப்படியாக கூறியுள்ளார்.

*"அப்படியே, நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார்".*

நித்திய வாழ்க்கை என்பது தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு ஈவு என்பதை நினைவு கூறுவோம். ஆனால், இந்த நித்திய ஜீவன் முழு பெலத்தோடு அவரை சேவித்தவர்க்கே உரித்தாகும்.

பாதாளத்தில் செய்கையும், வித்தையும், அறிவும் ஞானமும் இல்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆகையால், வேலையை கண்டு பிடிப்போம். முழு பெலத்தோடு செய்வோம். இன்னும் எத்தனை வருடங்கள் ஜீவிப்பது என்பது அதி முக்கியம் அல்ல. இனி எஞ்சியிருக்கும் காலங்களை எப்படி கழிப்போம் / ஜீவிப்போம் என்பதே முக்கியம். இந்த அடிப்படையில் தானே இயேசு கிறிஸ்து தம்முடைய வருகையில் "அவனவன் கிரியைக்கு ஏற்ற பலனை தம்மோடு கொண்டு வருவார்".



# நில் கவனி

நாம் நம்மை திகைக்ககூடிய அழகு நிறைந்த ஆச்சரியமான உலகத்தில் வாழ்கிறோம். ஆனால், நாம் எப்போதும் கவனிப்பதில்லை. கண்மூடித்தனமான நவீன வாழ்க்கையின் அவசரங்கள் அநேக காரியங்கள் நம் கண்களுக்கு மறைக்கின்றன. அடிக்கடி, சிறிது நாம் நின்று கவனிப்போமானால் நாம் கடவுளின் திறமையும், வல்லமையும் உள்ள அநேக கிரியைகளை கண்டு அதிசயிப்போம்.

டாவீஸ் என்பவர் தன் கவிதையின் மூலமாக இப்படி எழுதியுள்ளார்.

"மரங்களின் நிழலில் நிற்க நேரமில்லை

ஆடுகள், மாடுகளை கவனிக்க நேரமில்லை

கடந்து செல்லும் பாதைகளை காண முடியவில்லை

அணில்கள் தம் உணவை புல்லில் மறைத்து உண்ணும்


அருமை காட்சியை காண நேரமில்லை

இவ்வாழ்க்கையின் கவலைகள், பாரங்கள்

அதிகம் அதிகம்.

நின்று கவனிக்க நேரமில்லை"

என்று அருமையாக எழுதியுள்ளார்.



அவர் ஓர் சிறிய பூவை கண்டு அது எத்தனை அருமையாய் மாறுதல்கள் அடைகிறது. என எழுதியுள்ளார். பறவைகள் அருமையான ராகங்களை அமைத்து எப்படி பாடுகின்றன எனவும் எழுதுகிறார். கடுங் குளிர்காலத்தில் நாரைகளும், தூக்கணாங்குருவிகளும் இங்கிலாந்து தேசத்தை விட்டு ஆப்பிரிக்க கண்டத்திற்கு பறந்து செல்லும் அருமையான ஆச்சரியமான காரியத்தை எழுதியுள்ளார். மறுபடியும் தன் இடத்திற்கு திரும்பி வரும் அதிசயத்தை விளக்கியுள்ளார். இவைகளுக்கு நவீன கருவிகளான உபகிரக செயற்கை சாதனங்கள் அது கர்த்தர் தந்த திறமையை கொண்டு, ஒரு கண்டம்விட்டு, மறு கண்டத்திற்கு சென்று திரும்புகின்றன.

**கர்த்தர் அனைவரும் மேலும் அக்கரையுள்ளவர்.**

எங்கள் வீட்டுத் தோட்டத்தில் இரண்டு சிட்டுகுருவிகளின் கூடு உள்ளது.

தாய் குருவி தன் குஞ்சுகளை எவ்வளவு அழகாக பராமரிக்கின்றது. இறையை தேடி கொண்டு வந்து தன் குஞ்சுகளுக்கு ஊட்டுகின்றன. இந்த செயல் அநேகந்தரம் போகிறது. வருகிறதுமாக இருந்த போதும் சளைக்காமல் தன் குஞ்சுகளுக்கு ஊட்டி வளர்ப்பது எத்தனை அருமையான காட்சி. மனிதனுக்கு இது தேவையில்லாத ஒன்றாக காணப்படலாம். இது என்ன சாதிக்கின்றன. இதற்கு என்ன விலையுண்டு என சிலர் நினைக்கலாம்.

முதலாம் நூற்றாண்டில் சிறிய பறவைகளை அநேக வேதாகம குறிப்புகள் பறவைகளை வாங்குவதும், விற்பதுமான காரியத்தை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளன. மத்தேயு 10:29ல் இயேசு, *''ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா ?''* என்றும், மற்றும் லூக்கா 12:2ல் *''இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா ?''* என்று சொல்லியிருக்கிறார். அதிக பறவைகள் வாங்கினால். ஐந்தாவது பறவை இலவசமாக கிடைத்திருக்கும் என நினைக்கிறேன். *''நான்கு வாங்கினால் ஒன்று இலவசம்''* என்பது போல் அதாவது அந்த ஐந்தாவது பறவைக்கு விலை இல்லை. விற்கிரவனுக்கு ஒரு பொருட்டல்ல. ஆனால் இயேசு சொல்கிறார், அது கர்த்தரின் கரிசனையில்/அக்கறையில் ''இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா ? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுவதில்லை.

*''உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆகையால் பயப்படாதிருங்கள். அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்'' (லூக்கா 12:67).*

இந்த வாக்கு நமக்கு எத்தனை தைரியத்தை அளிக்கிறதாய் இருக்கின்றன. கர்த்தர் அந்த ஒரு பறவையின் மேலேயே அவ்வளவு கரிசனையுள்ளவராயிருந்தால், நம்மேல் இன்னும் எவ்வளவு அதிக கரிசனையுள்ளவராய் இருக்கிறார் என்பதை அதிக நிச்சயமாய் அறியலாம்.

## தேவனும் அவர் உலகமும்

கடவுள் இந்த உலகத்தை படைத்ததின் நோக்கம் நல்லது என்று நம்மை சுற்றி பறக்கின்ற பறவைகள் நமக்கு நினைவு படுத்துகின்றன. கர்த்தர் இந்த உலகத்திலுள்ள செடி கொடிகள், மிருகங்கள் அனைத்தும் படைத்து கடைசியாக மனிதனை அவற்றை ஆளும்படியாய் சிருஷ்டித்தார். அவர் எல்லாவற்றைம் அதிக அக்கரையும், கரிசனையும் உள்ளவராய் படைத்தார். கர்த்தர் நினைத்தபடி ஒரு அருமையான, சமநிலையான சூழ்நிலைகளை உண்டாக்கினார். அது அருமையானதாய் இருந்தது. ஏனெனில், அதை உருவாக்கினவர் அன்புள்ளவர், அழகானவர், அருமையானவர். கர்த்தருக்கு இந்த சிருஷ்டிப்பு எல்லாவற்றைக் காட்டிலும் மிக உன்னதமான படைப்பாய் இருந்தது.



*''அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.*

*இவ்விதமாக வானமும், பூமியும் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன'' (ஆதியாகமம் 1:31,2:1)*

ஆணும், பெண்ணும் தேவனின் சாயலில் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டார்கள். தேவனின் பார்வையில் நல்லது என்று கண்டார். மனித இனம் சிருஷ்டிப்பில் ஒன்றாயிருந்தபோதும், எல்லா சிருஷ்டியோடும் இணைந்து சிருஷ்டி கர்த்தாவோடு ஜீவிக்கும்படியாய் சிருஷ்டிக்கபட்டனர். நாம் ஒரு அருமையான கலகலமற்ற அழகான சமவெளியில் உள்ள ஒரு தண்ணீர் தடாகத்திற்கு சென்று நிற்கும்போது நாம் உண்மையான சந்தோஷத்தை அடைவதோடு மட்டுமல்லமல்ல கர்த்தரின் அதிசய சிருஷ்டிப்பை உணர்ந்து ஸ்தோத்திரிக்காமல் இருக்க முடியாது.

ஆதாம் பாவஞ்செய்து இந்த உலகத்தில் மரணத்தை வருவிப்பதற்கு, முன்பு, இந்த அமைதியும், சமாதானமும், ஒருமனமும் இன்னும் அதிகமாய் இருந்தது. உயிரினங்களில் எந்த வேற்றுமையும் இன்றி ஒருங்கிணைந்து சமநிலையால் வாழ்ந்தன.

கர்த்தரும் இதையே விரும்புகிறார் என அறியாமல், இன்று அநேகர் அதிக சமநிலையும், நிலையான அமைதி நிறைந்த உலத்தையும் நாடுகின்றனர். பூரணமான ஒரு உலகத்தை கர்த்தரின் வல்லமையால் மாத்திரமே அடைய முடியும். மனிதன், தன்னை சரிசெய்துக் கொண்டு, தேவன் பக்கமாய் திரும்பவேண்டும். முதற்படியாக, கர்த்தர் இந்த அழகான அதிசயமான உலகத்தை சிருஷ்டித்தார் என்று அறிய வேண்டும்.

## அதிசயமான சிருஷ்டி கர்த்தர்

நாம் உலகத்தை சுற்றி நோக்கும்போது கடவுள் இருக்கிறார் என்பதையும், அவர் எப்படிப்பட்டவர் என்பதையும், அறிந்து கொள்ளமுடியும். இந்த உலகமும் அதில் உள்ளவைகளும் ஏதோ தற்செயலாய் வந்தவை அல்ல. இவை அழிக்க தோன்றினவைகளும் அல்ல.

அனைத்தும் ஒரு அருமையான திட்டத்தோடும் குறிப்பிட்ட நோக்கத்தோடும், உண்டாக்கப்பட்டவைகள் உருவாக்கப்பட்டவைகள் உருவாக்கினவரை அறிந்து கொள்ள முயற்சிக்கின்றன. உருவாக்கினவர் ஒரு நல்ல திட்டமுடையவர் சிருஷ்டி கர்த்தர். அதிசயங்களை செய்பவர் என்று நினைக்கும்போது நம்மை உற்சாகப் படுத்துகின்றன.

ஒரு தொல்பொருள் யாருடையது என்று கண்டறிய அதை உருவாக்கினவரின் முத்திரையை / கையெழுத்தை தேடுவதுபோல், நாம் கடவுள் கையெழுத்தை உலக முழுவதிலும், நம்மை சுற்றிலும் பார்க்கமுடியும்.